REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 7 காசுகள் ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★
மூன்று மாதம் ... ... ரூ. 6
ஆறு மாதம் ... ... ரூ. 12
ஒரு வருடம் ... ... ரூ. 24
தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: பங்குனி 29உ வியாழன் (11—4—57) ★ ★ வெளியூர்: பங்குனி 30உ வெள்ளி (12—4—57) [இதழ் 260

'காலம் கற்பிக்கும் பாடம் மறவோம்'

'ஆணவம் கொள்ளவும் மாட்டோம்— ஆயாசப்படவும் மாட்டோம்'

'15 இடங்களில் பெற்ற வெற்றி பெருமகிழ்ச்சிக்குரியதே'

'ஆனல் பட்டபாட்டிற்கு ஈடானதல்ல'

பொதுத்தேர்தல் முடிவுகள் குறித்து அண்ணு ஆய்வுரை

தேர்தலில் நாம் பெற்ற வெற்றி - தோல்விகள் பற்றி அரியதோர் ஆராய்ச்சியுரை வழங்கியுள்ளார், அண்ணு அவர்கள்!

கடந்த 7—4—57 அன்று திருவல்லிக்கேணியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய அண்ணு அவர்கள், 'அதிகமான அளவுக்கு ஆணவப்பட்டு விடாதே' என்றும், 'உனக்கு ஆனந்தத்தையும் தருவேன்—அதே நேரத்தில் சற்று ஆயாசத்தையும் தருவேன்' என்று நமக்குக் காலம் கற்பிக்கும் அருமையான பாடம் என்ற முறையில்தான் நாம், இந்தத் தேர்தல் முடிவுகளை அணுகவேண்டும் என்று கருத்துரையை வழங்கியுள்ளார்.

15 இடங்களில்தான் வெற்றிபெற்ருேம் என்பது, மக்கள் நம்மைக் கைவிட்டுவிட்டார்கள் என்று பொருள் கொண்டதல்ல என்பதையும் விவரமாக விளக்கிய அண்ணு அவர்கள், நாம் பல இடங்களில் வெற்றி பெற முடியாமற் போய்விட்டதற்கான காரணங்களையும் தெளிவாக்கியிருக்கிருர்கள்.

அவரது சொற்பொழிவின் முதல் பகுதி இங்கு தரப்படுகிறது :—

யாரைக் கண்டால் முகத்தில் மலர்ச்சி?

"தேர்தலில் தி. மு. கழகம் பெற்றிருக்கிற வெற்றி மிகச் சிறியது; ஆனல், மக்கள் காட்டும் ஆர்வமும் உற்சாகமும் மிகப் பெரியது. 150 இடங்கள் காங்கிரஸ்காரர்கள் பெற்றிருக்கிருர்கள்; 15 இடங்களைத்தான் நாம் பெற்றிருக்கிருேம்.

"ஆனல், விலை உயர்ந்த மோட்டார்காரில் விலையுயர்ந்த ரூ. 200 சேலையைக் கட்டிக்கொண்டு எசமானியும், ரூ. 4 அல்லது ரூ. 5 சேலை கட்டிக்கொண்டு அவளது பணிப்பெண்ணும் சென்று காரை விட்டு இறங்கும் நேரத்தில் வேலைக்காரனுக்கு யாரைப்பார்த்தால் முகத்தில் மலர்ச்சி தோன்றும் என்ருல், யாருடைய சேலை விலை அதிகமோ அவளைப்பார்த்தல்ல; எந்த சேலைக்காரி தனக்குச் சொந்தக்காரியோ அவளைப் பார்த்தால்தான் முகம் மலரும். அதைப்போலத்தான் 150 இடங்களைக் காங்கிரசார் கைப்பற்றினலும், நாட்டு மக்களுக்கு—இந்த 4 ரூபாய் சேலைக்காரியைப் போன்றுள்ள எங்களைப் பார்த்தால்தான் முகத்திலே அவர்களுக்கு மலர்ச்சி அரும்புகிறது.

வலிவும் பொலிவும் பெற உறுதுணையாகும்!

"ஏனென்ருல், எங்களுக் கேற்றவர்கள் நீங்கள்; உங்களுக்கேற்றவர்கள் நாங்கள். அந்த முறையில் தி. மு. கழகம் பெற்றிருக்கும் இந்த வெற்றியை, தி. மு. கழக அன்பர்களும் ஆதரவாளர்களும் பெரிய வெற்றியாகக் கருதிப் பாராட்டுகிருர்கள். அந்தப் பாராட்டுதல்களின் மூலம் நமக்குக் கிடைக்கும் உற்சாகம், மேலும் பலவகையான வலிவையும் பொலிவையும் நம் கழகம் பெற உறுதுணையாக இருக்கும் என்ற முறையில் நாங்களும் இந்தப் பாராட்டுக்களில் கலந்துகொள்வதில் பெருமையும் பூரிப்பும் கொள்கின்ருேம்.

"தி. மு. கழகம் 15 இடங்களில்தான் வெற்றி பெற்றது என்ருல், அது மிக அதிகமான அளவுக்கு வெற்றி பெற்றிருக்க வேண்டும்; அந்த அளவுக்கு தி. மு. கழகம் நாட்டில் பணியாற்றியிருக்கிறது.

பாசறை அமையாத பட்டிதொட்டி உண்டா?

"இந்த 8 ஆண்டுகளில் தி. மு. கழகம் தொட்டுப் பார்க்காத பிரச்சினை இல்லை; சென்று பேசாத ஊர் இல்லை; அதனுடைய குரல் நுழையாத நல்ல செவி இல்லை; அதன் பாசறை அமைக்கப் படாத பட்டிதொட்டி இல்லை. நாள் தவருமல் மக்களிடத்தில் இடையருத தொடர்பு வைத்துக் கொண்டு நல்ல உள்ளத்தோடு பிரச்சினைகளை அணுகி, எல்லா மக்களையும் தன் இனமக்களாகக் கருதி, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உத்தமமான கொள்கையை நாட்டில் நிலை நாட்ட வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு பணியாற்றி, இழிவையும் பழியையும் தாங்கிக் கொண்டு, ஈனத்தனமான எதிர்ப்புகளையெல்லாம் கண்டு கலக்கமடையாமல், சர்க்கார் அடக்குமுறை வீசிய நோத்திலெல்லாம் அவைகளுக்கெல்லாபு தலைகொடுத்து—தியாகத் தழும்ம்களைப் பெற்று ஒரு இயக்கம்

(4-ம் பக்கம் பார்க்க)

***

குளித்தலையில் பொதுக்குழு ஏற்பாடுகள்

14—4—57-ல், குளித்தலையில் நிகழ இருக்கிற பொதுக்குழுவுக்கான ஏற்பாடுகளைத் தோழர்கள் மும்முரமாகக் கவனித்துவருகின்றனர்.

குளித்தலை கடம்பர் கோயிலிலுள்ள பசுமடத்தில் பொதுக்குழு கூட, இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

வெளியூரிலிருந்து வரும் உறுப்பினர்களுக்கு உறுதுணையாக புகை வண்டி நிலையத்திலும், பஸ் நிலையத்திலும் தொண்டர்கள் காத்திருப்பார்கள்.

அன்று மாலையில், கடம்பர் துறை அழகிரி சதுக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுமக்கள் வரவேற்பு—வெற்றி விழாவுக்கான சிறப்பான செயல்களில் வரவேற்புக்குழுவினர் உற்சாகமாக ஈடுபட்டுள்ளனர்.

பொதுக்குழுவுக்கான ஆக்க வேலைகளில் தோழர் மு. கருணநிதியும் உடனிருந்து ஒத்துழைத்துவருகிருர் என திருச்சி மாவட்டச் செயலாளர் அறிவிக்கிருர்.

***

கம்யூனிஸ்டு சர்க்காரை வீழ்த்துவதே முதல் வேலையாம்!

பட்டம் தாணு பிள்ளை கூற்று

"கேரளத்தில் கம்யூனிஸ்டு சர்க்காரை தூக்கி எறிவதற்குக் காங்கிரசுடன் சேரமாட்டோம் என்று உறுதிமொழி தருவீர்களா?'

என்று கேரள பி. சோ. தலைவர் பட்டம்தாணுபிள்ளையிடம் பத்திரிகையாளர் கேட்டபோது அவர், 'முதல் சந்தர்ப்பம் கிடைக்கும்போதே, கட்டாயம் காங்கிரசின் ஆதரவுடன்—கூட்டுறவுடன் அந்த சர்க்காரை வீழ்த்துவதே எங்கள் முதல் வேலை,' என்று கூறினர் எனத் தெரிகிறது.

"சென்னை மாநிலம் கலாச்சாரத்திற்கும் சரித்திரப் பெருமைக்கும், மேதைகளுக்கும் உறைவிடமாகும் என்பதை நான் அறிந்த ஒன்ருகும்"

என்று, இந்தியாவிள்ள அமெரிக்கத் தூதுவர் எல்ஸ்வர்த் பஸ்கர், சென்னை வந்தபோது கூறியுள்ளார்.

கேரளத்தை தொழில் மயமாக்க!

பம்பாய்-குஜராத்தி முதலாளிகளுக்கு ஏ. கே. கோபாலன் அன்பழைப்பு

பம்பாயில் உள்ள முதலாளிகள் பலரைச் சந்தித்து, கேரளத்தில் தொழில்கள் நிறுவுமாறு கம்யூனிஸ்டுத் தலைவர் ஏ. கே. கோபாலன் கேட்கப்போவதாக, அவர் பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிருர்.

★

குஜராத், பம்பாய் ஆகிய இடங்களிலிருந்து முதலாளிகளை தொழில்கள் நிறுவுமாறு அழைக்கிற நோத்திலேயே, 'தொழில்கள் தேசியமயமாக்கப்படுதல், கேரள கம்யூனிஸ்டு தொழிலாளர் தரும் தொல்லை இவை குறித்து முதலாளிகளுக்கு ஏற்படக்கூடிய அச்சத்தையும் நான் தவிர்க்க விரும்புகிறேன்,' என்றும் அவர் பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிருர்.

'மாநிலத்தில் உள்ள எல்லாத் தொழில்களையும் நாங்கள் தேசியமயமாக்கப் போவதில்லை; தொழிலதிபர்கள் தங்கள் தொழில் மூலம் மக்களுக்கு நன்மைகள் புரிவதை உறுதி செய்வார்களானல், இந்தத் தேசியமயமாக்கும் பிரச்சினை நெடுநாளைக்கு எழாது,' என்றும் அவர் கூறியிருக்கிருர்.

'வெள்ளை முதலாளிகளின் தோட்டங்களில் தொழிலாளர் நிலை தரமாயிருக்கிறது'

காரணம்காட்டிக் கூறுகிருர் ஏ. கே. கோபாலன்

"அன்னிய நாட்டவருக்குச் சொந்தமானவற்றுள் சில தோட்டங்களில், தொழிலாளர் நிலை இந்திய முதலாளிகளுக்குச் சொந்தமான தோட்டங்களில் இருப்பதைவிட, தரமாயிருக்கிறது என்று மத்திய மந்திரி மொரார்ஜி தேசாய் கூறியிருப்பதை நான் ஒப்புகிறேன்; ஆனல், இந்த ஒப்புவமை சரியானதல்ல; ஏனெனில் அன்னிய முதலாளிகளுக்கு ஏகபோக ஆதிக்க வாய்ப்பு இருக்கிறது; அவர்கள், ஒவ்வொரு கட்டத்திலும், உற்பத்தி முதல் விநியோகம்வரை இலாபம் சம்பாதிக்கிருர்கள்; எனவே, அவர்கள் தொழிலாளர் நலன்களை அபிவிருத்தி செய்ய வசதி படைத்தவர்களாகிருர்கள்"

என்று, பம்பாய் பத்திரிகையாளரிடை பேசுகையில் தோழர் ஏ. கே. கோபாலன் கூறியிருக்கிருர்.

செங்கற்பட்டு நகரசபைத் தலைவர் எம். வேதாசலம் காலமானர்

செங்கற்பட்டு, ஏப். 10—

செங்கற்பட்டு நகரசபைத் தலைவரும், மாவட்டத்தின் முன்னேற்றத்திற்குப் பொருளுதவியளித்து பல நல்ல காரியங்களைச் செய்தவரும், வர்த்தக உலகத்தின் பிரமுகரும், பண்டைய நீதிக்கட்சியின் ஆதரவாளரும், மக்கள் நலனுக்கும்—நல்வாழ்விற்கும் பாடுபட்டவருமான திரு. எம். வேதாசலம் (முதலியார்) அவர்கள் புதுவையில் தனது இல்லத்தில் இன்று மாலை 5-30 மணிக்கு காலமானர் என்று அறிவிக்க வருந்துகிருேம்.

அவருக்கு 61 வயதாகிறது; புதுவையிலிருந்து, செங்கற்பட்டுக்கு அவரது சடலம்கொண்டு வரப்பட்டது.

மாணவர்கள், ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோர் அவருக்குக் கடைசி மரியாதை செலுத்துவதற்கு சாரை சாரையாக வந்தனர்.

அவர், கல்வி நிலையங்களுக்குப் பொருளுதவி தந்துள்ளார்; தலைமை மருத்துவ விடுதிக்கு ரூ. 1 இலட்சம் நன்கொடை வழங்கியுள்ளார். 'வேதாசலம் நகர்', அவரை என்றும் அமரராக்கியுள்ளது.

அவர் பிரிவால் வாடும் நகர மக்களுக்கும், வேதனையுறும் குடும்பத்தினருக்கும், உற்ருர் உறவினருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தை உரித்தாக்குகிருேம். (ஆ.-ர்.)

நம் நாடு

சென்னை 11—4—57 வியாழன்

சிறந்த படிப்பினை!

பாகிஸ்தான் அரசு ஏற்பட்டு இன்று ஏறத்தாழ பத்தாண்டுகள் ஆகிவிட்டன. அங்கு இதுவரை பெயருக்கேற்பப் பொருளுடைய நிலையான ஆட்சி ஏற்படவே இல்லை.

தனக்குத் தேவையான ஒரு அரசியல் அமைப்பை உருவாக்கிக் கொள்வதிலும்கூட அது காலங்கடத்தி வந்திருக்கிறது. இது போலவேதான், அங்குள்ள மக்களைப் பொறுத்த ஒவ்வொரு பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவதிலும் காலதாமதம் ஏற்பட்டு வந்திருக்கிறது.

முழு மூச்சாக முயன்று பாகிஸ்தான் அரசை நிர்மாணித்த முஸ்லிம் லீக் கட்சியும், எதிர்பார்க்கக்கூடியதற்கும் குறைவான காலத்திற்குள்ளாகவே சிதைந்து போயிற்று. அக்கட்சியின் சரிவுக்கு ஆற்றல் மிகுந்த தலைமை இல்லாதது பெருங்காரணமாக இருந்தது போன்றே, அங்குள்ள மற்ற கட்சிகள் ஏற்றம் பெறமுடியாததற்கும் அதே தலைமை இல்லாக் குறையே காரணமாக இருந்துவருகிறது.

அங்கு மக்கள் ஒரு பக்கமும், அரசியல் கட்சித் தலைவர்கள் எனப்படுவோர் ஒரு பக்கமும் சென்று கொண்டிருக்கின்றனர்கள். அந்தத் தலைவர்களில் எவரும் மக்கள் விருப்பு அறிந்து நடந்து கொள்ளுகிறவர்களாகக் காணோம். எனவே, மக்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் இடையில் இணைக்க முடியாத பெரும் பிளவு இருந்து வருவதில் வியப்பொன்றுமில்லை.

இவ்வளவும் ஒரு பக்கம் இருக்க, பாகிஸ்தான் மத்திய ஆட்சிக்கும் கிழக்கு பாகிஸ்தான் மாகாண ஆட்சிக்கும் துவக்க முதல்கொண்டே அதிருப்தி இருந்துவருகிறது. மத்திய ஆட்சியில் மேற்கு பாகிஸ்தான் மாகாண ஆட்சிகளுக்கு இருந்துவரும் மதிப்பளவு கிழக்கு பாகிஸ்தானுக்கு இல்லை என்று ஏற்கனவே பலமாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இவ்வாறு கிழக்கு பாகிஸ்தான் சாட்டிய குற்றத்தின் உள்ளடக்கத்தைக் கண்டறிந்து பரிகரிக்க பாகிஸ்தான் மத்திய அரசு தவறிவிட்டது. தவறிவிட்டதுடன் நில்லாது, கிழக்கு பாகிஸ்தானின் இயல்பான பலத்தை ஒடுக்க, மேற்கு பாகிஸ்தானில் இருந்துவந்த தனித்தனியாகான அமைப்புகளை எல்லாம் தகர்த்தெறிந்துவிட்டு, மேற்கு பாகிஸ்தான் என்ற ஓரே அமைப்பை உருவாக்கியது பாகிஸ்தான் அரசு.

மேற்கு பாகிஸ்தான்-கிழக்கு பாகிஸ்தான் என்ற இருபெரும் ஆட்சி அமைப்புகளை இணைத்து உருவாக்கப்பட்ட மத்திய பாகிஸ்தான் அரசமைப்புமூலமும் கிழக்கு பாகிஸ்தானை ஒடுக்கிவிட முடியவில்லை. என்றும்போல் மத்திய அரசுக்கும் கிழக்கு பாகிஸ்தான் ஆட்சிக்கும் இருந்துவந்த மோதுதல் இன்னும் நீடித்தே இருக்கிறது.

வெறும் மோதுதல் என்ற வரம்பையும் இன்று கி. பாகிஸ்தான் தாண்டிச் சென்றுவிட்டது. சில சலுகைக் கேட்கும் நிலையை உதறித்தள்ளிவிட்டு, முழு சுயாட்சி கேட்கும் நிலைக்கு வந்துவிட்டது.

முழு சுயாட்சி உரிமை வழங்குமாறு கோரும் தீர்மானம் ஒன்றை கி. பாகிஸ்தான் சட்டசபை இத்திங்கள் முதலில் நிறைவேற்றி இருக்கிறது. இக்கோரிக்கையை சட்ட சபையில் எதிர்த்தவர் எவருமில்லை. குரல் வாக்குமூலம் எதிர்க்கட்சியினரும் ஒன்றாகக்கூடி ஒருமுகமாக சுயாட்சி உரிமை தீர்மானத்தை நிறைவேற்றி வைத்துள்ளனர்.

இராணுவம், வெளிநாட்டு உறவு, செலாவணி ஆகிய மூன்றையும் தவிர, மற்ற துறைகளை மாநில அரசாங்கத்திடம் விட்டுவிடவேண்டும் என்பதே, அந்த முழு சுயாட்சி உரிமை தீர்மானத்தின் உள்ளடக்கமாகும். உருதுமொழித் திணிப்புக்கு எதிராகக் கிளம்பிய கி. பா. மக்கள் குரல், முழு சுயாட்சி கோருவதில் வந்து நின்றுள்ளது.

இந்த அளவுடன் கி. பா. மக்கள் நின்றுவிடுவார்களா அல்லது சுதந்திரத் தனியாட்சி கோரும் நிலைக்குச் சென்றுவிடுவார்களா என்பது, பா. மத்திய அரசு இனிமேல் செயலாற்றப் போகும் செயல் முறையைப் பொறுத்திருக்கிறது. மத்திய அரசு, இதுவரை மேற்கொண்டு வந்த பிடிவாதத்தையே உடும்புப் பிடியாகப் பின்பற்றி வருமானால், கி. பா. எதிர்காலமும் தனியாட்சியில்தான் வந்து முடிவுறும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே.

பாகிஸ்தானுக்குத் தேவையான வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுத் தருவதில் முதன்மையாக இருந்துவருவது கிழக்கு பாகிஸ்தானேயாகும். ஆனால் கடந்த ஒன்பதாண்டுக் காலமாக கி. பா.விற்காக மத்திய ஆட்சி செலவிட்டு வருவதோ, ஐந்தில் ஒரு பங்கிற்கும் குறைவானதாகும்.

இராணுவத்தில் கிழக்கு பாகிஸ்தானுக்குரிய பங்கை, மத்திய அரசு வழங்காமலே இருந்து வருகிறது. அவ்வகையில் கி. பா. விஷயத்தில் ஓரவஞ்சனையாகவும் மத்திய அரசு நடந்து வருகிறது.

உயர்ந்த உத்தியோகங்களை வழங்குவதில் கி. பா.-விற்கு, அதே பாரபட்சத்தைத்தான் மத்திய அரசு பரிசாகத் தந்து வருகிறது. இது போலவே, எல்லாவகையிலும் கி. பா. மக்களின் நலன்களையும், நியாயமான கோரிக்கைகளையும் நிறைவேற்றாமலே பாகிஸ்தான் மத்திய அரசு அலட்சியப்படுத்தி வருகிறது.

விளைவு, முழு தன்னாட்சி கோரும் கட்டத்திற்கு கி. பாகிஸ்தான் வந்திருப்பதுதான்.

இது ஒரு மகத்தான படிப்பினையாகும்.

இந்தப் படிப்பினை பாகிஸ்தான் மத்திய அரசினருக்கு மட்டுமல்ல—அவர்கள் நிலையில் உள்ள எந்தப் பேரசிற்கும் இது மகத்தான படிப்பினையாகும்!

ஒரு பேரசின் பிடியில்சிக்கி உரிமை இழந்து, வறுமையில் வாடி, வாழ வகை கிடைக்காது நொந்து கிடக்கும், எந்த ஒரு ஆட்சி அமைப்பும், இறுதியில் என்றாவது ஒரு நாள் உரிமை முழக்கமிடுவது நிச்சயத்திலும் நிச்சயமாகும்.

எனவே, பேரசு எதுவாயினும், அதற்கு கிழக்கு பாகிஸ்தான் முழு தன்னாட்சி முழக்கம் சிறந்ததோர் படிப்பினையேயாகும்!

வடநாட்டு ஆதிக்கம் பல துறைகளிலும் விரிகிறது!

சட்டம் இயற்றாமலே ‘வரி விதிப்பது’ நியாயமா?

சென்னைக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் முழக்கம்

7-4-57-ல், சென்னை-திருவேட்டீசுவரன்பேட்டை, புரட்சித் திடலில், திருவல்லிக்கேணி தொகுதி தி. மு. கழகங்கள்—துணை அமைப்புகள் சார்பில், வெற்றி பெற்ற கழக அபேட்சகர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாப் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

"தனது இலட்சியத்தை ஈடேற்ற தி. மு. கழகம் மேற்கொண்டுள்ள பல வழிகளில்—பல துறைகளில் ஒன்றுதான் இன்றைய சூழ்நிலையில் சட்ட மன்றம் புகுதலாகும். சட்ட மன்றம் புகுவதின் மூலமாகவே திராவிட நாட்டைப் பெற்றுவிட முடியும் என்று கருதி அல்ல; சிலர் கேட்டனர்—'நீங்கள் சட்ட மன்றம் புகுகிறீர்கள் என்றால் திராவிட நாட்டை அதன் மூலம் பெற முடியுமா?'—என்று!

"சட்டமன்றம் புகுவது திராவிட நாட்டைப் பெறுவதற்கு மட்டுமே அல்ல—திராவிட நாட்டைப் பெற சட்ட மன்றம் புகுவது மட்டுமே ஒரேவழி அல்ல—சட்ட மன்றமும் ஒரு வழியாகும்.

"எனவேதான், நாம், ஜனநாயகக் கடமைகளில் ஒன்று என்பதைக் கருதியும், பொதுமக்கள் மன்றத்தில் எடுத்துவைக்கும் அத்தனை கருத்துக்களை சட்ட மன்றத்திலும் பாராளுமன்றத்திலும் எடுத்துவைக்கவும்—சட்ட மன்றத்திலும் பாராளுமன்றத்திலும் நிகழும் நிகழ்ச்சிகளை மக்கள் மன்றத்தின்முன் எடுத்துவைக்கவும், அந்தத் தூதுவர் படையாகத் தி. மு. கழகம் விளங்கவும் இன்றையச் சூழ்நிலையில்—அறிவுமிக்க-ஆற்றல்மிக்க, தகுதி-திறமை படைத்த எதிர்க்கட்சியாக விளங்கும் என்ற அடிப்படையில்தான் தி. மு. கழகம் இன்றையத் தேர்தலில்—இன்றையச் சூழ்நிலையில் ஈடுபடுகிறது என்பதற்கான காரணகாரியங்களை எடுத்துவைத்தோம்.

"அப்போதே, நாம் அழிந்தே விடுவோம் என்று ஆருடம் கூறினோர் பலப்பலர்; 'தேர்தல் இவர்களுக்கு முடிவு கட்டிவிடும்,' என்று ஆட்சிபீடத்திலிருக்கிற ஆளவந்தார்களெல்லாம் கூறிவந்தார்கள்; 'இந்த நாடு இவர்களுக்கு நல்ல பாடம் கற்பித்துவிடும்,' என்றெல்லாம் பலப்பலர் கூறினார்கள்.

"தி. மு. கழகத்தைச் சேர்ந்த ஆற்றல்மிக்க இளைஞர்களும், மாணவர்கள் படையினரும், பெரியவர்களும், நல்லறிவு படைத்தோரும், ஆன்றோரும் சான்றோரும், பாட்டாளிகளும் தொழிலாளரும், பல்வேறு தொழில் துறையில் ஈடுபட்டிருப்பவர்களும், வேறு பல நண்பர்களெல்லாம் அரும்பாடுபட்டு, தி. மு. கழகத்தின் வலிவு இன்னது என்று நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். 'வினைவலியும் தன்வலியும், மாற்றான் வலியும் துணை வலியும் தூக்கிச் செயல்' என்று வள்ளுவர் கூறினார்; எனவே, வினை வலியை நாம் அறிந்திருக்கிறோம்; தன் வலியையும் நாம் அறிந்திருக்கிறோம். மாற்றான் வலிகள் எப்படி எப்படியெல்லாம் வேலை செய்கின்றன என்பதையும் அறிந்திருக்கிறோம். எவ்வளவு சூது—சூழ்ச்சி—தந்திரங்களை அவை கையாளும் என்பதையும் அறிந்திருக்கிறோம்.

"இரவோடு இரவாக எங்கெந்தப் பணமூட்டைகள், எப்படியெப்படி யாரார் மூலம் யார் யாருக்குப் பணத்தை வழங்கும் என்பதையும் அறிந்திருக்கிறோம்.

"மாற்றான் வலிகள் எங்கெந்த வகையில் அதற்கு அனுசரணையாக இருக்கும் என்பதையும், நமக்கு வருகின்ற துணைவலியையும், மாற்றாருக்கு வருகின்ற துணைவலியையும் புரிந்திருக்கின்றோம்.

"நம்மை நாமே அதிகமாக எடைபோட்டுக் கொள்பவர்களல்ல நாம். மக்களிடம் நம்வலி நாளுக்குநாள் வளருவதையும், மாற்றார்வலி நாளுக்குநாள் குறைவதையும் அறிந்திருக்கிறோம். அந்த முறையில்தான் தி. மு. கழகம் அரும்பாடுபட்டது.

"இத்தேர்தலில் பலர் இழித்தும் பழித்தும் நம்மைப் பேசினர்; வசைமாரி பொழிந்தனர்; நம்மைப்பற்றி இல்லாததும் பொல்லாதது எல்லாம் புனைந்து பார்த்தார்கள்; நான்கு பக்கங்களிலிருந்தெல்லாம் தங்கள் கணைகளையும் எய்தார்கள்; தன்னந்தனியாக நின்று தடந்தோள்களால் நாம், தடைகளைத் தோற்கடித்தோம்.

"இன்றைக்கு ஆட்சிபீடத்தில் ஏறியிருக்கிற காங்கிரஸ், தங்களுக்கு டெல்லி பாராளுமன்றத்திலும், சென்னை சட்டசபையிலும் ஏகபோக பெரும்பான்மை வலிவு இருக்கிறது என்கின்ற காரணத்தாலும், தங்களுக்குச் சாதகமாக சட்டங்களை இயற்றிவைத்துக் கொண்டும், அது, இந்தத் தேர்தலை அணுகியிருக்கிறது. அமைச்சர்கள் அமைச்சர்களாக இருந்து கொண்டு தேர்தல் பிரச்சாரம் செய்திருக்கின்றனர். மக்கள் அனைவருடைய வரிப்பணத்திலும் வாங்கப்பட்ட கார்களில் ஏறிக்கொண்டு தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்கள்.

"நேர்மையையும் நாணயத்தையும் இன்றைய சர்க்கார் கடைப்பிடித்தார்களா? அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் சர்க்கார் எவ்வாறு தங்களுக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்? அவ்வளவு மந்திரிகளும் காரில் பவனி வந்தார்களே—யாருடைய காரில்? ஓயாமல் சுற்றுப் பயணம் செய்தார்களே — யாருடைய காரில்? அமைச்சர்களுடைய அதிகாரத்தைக் கண்டு அச்சப்பட்டு, அதற்கு அடங்கி நடக்க வேண்டியவர்களாகத்தானே இருந்தார்கள் அதிகாரிகள்?

"அரசாங்கத்தினுடைய சலுகைகளைப் பயன்படுத்திக்கொண்டது மட்டுமல்லாமல் காங்கிரசுக்காரர்கள் நம்மை இழித்தும் பழித்தும் பேசினார்கள்.

"தி. மு. கழகத்தினர் சினிமாக்காரர்கள் என்று சொன்ன காங்கிரசுக்காரர்கள் 1,400 அடி நீளச் சினிமாப் படம் எடுத்துத் தேர்தல் பிரச்சாரம் செய்தார்கள் என்றால்—அவர்களிடத்திலிருக்கிற சட்டம், 'சென்சார் போர்டு' போன்ற அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தார்கள் என்றால் இதற்குப் பெயர் சனநாயகமா? நேர்மையா? நியாயந்தானா?

"இன்றைக்கிருக்கிற காங்கிரஸ் மாகாண சர்க்காரும் சரி, இந்திய சர்க்காரும் சரி—எந்த அளவுக்கு ஜனநாயகத்தைப் புறக்கணிக்கிறார்கள் என்பதற்குப் புதிதாக வந்திருக்கிற 'நயா பைசா'வே போதிய சான்றாகும்.

"வடவருடைய நாகரிகமும், ஆட்சியும், இந்தி மொழி ஆதிக்கமும் இங்கு ஏற்படுவதற்கான பல வழிகளில் 'நயா பைசா'வும் ஒன்று. அந்தக் காசில் எழுத்துக்கள் அவ்வளவும் இந்தி மொழி—எண்கள் மட்டும் அராபிய மொழிகளில் இருக்கின்றன — மற்றவைகள் எல்லாம் இந்தியில்தான்! இங்கு கூடியிருக்கிற அத்தனை பேரையும் கேட்டுக்கொள்கிறேன்—அதை 'நயா பைசா' என்று அழைக்காதீர்கள்—எழுதாதீர்கள்; அதை 'காசு' என்று வழங்குங்கள்,"

இந்த சர்க்கார் எவ்வளவு நாணயமற்ற சர்க்கார்—நேர்மையற்ற சர்க்கார்—எப்படி நேர்மையைப்புறக்கணிக்கிற சர்க்கார் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன்—ரூபாயிக்கு மதிப்புக் கொடுப்பதும்—மதிப்பை நிர்ணயிப்பதும் சர்க்கார்; இந்த ரூபாய்க்கு இன்ன மதிப்பு—இன்ன காசுக்கு இன்ன மதிப்பு—என்று நிர்ணயிப்பது சர்க்கார்; சர்க்கார் நிர்ணயிப்பை அடிப்படையாக வைத்துத்தான் நாம் அத்தனைபேரும் அதை மதிக்கிறோம்.

"இந்த சர்க்கார் சொல்லிற்று—நான் ரூபாய்க்கு 100 காசுகள் என்று மதிப்பிடுகிறேன்—ஒரு அணா என்றால் 6 காசு என்று மதி; இரண்டணா என்றால் 12 காசாக மதி; 3 அணா என்றால் 19 காசாகவும், 4 அணா என்றால் 25 காசாகவும் மதி—என்று நிர்ணயித்தது இந்த சர்க்கார்!

"ஆனால், 2 அணா கவளை 13 காசாக மதிக்கவேண்டும் என்று, இந்த இந்திய சர்க்காரே கூறுகிறது. என்றால் அது

(4-ம் பக்கம் பார்க்க)

மேற்கு கடற்கரையில் 1 கப்பல் தொழிற்சாலை

கொச்சியில் அமையக்கூடும்?

உதகை, ஏப். 9—

மேற்குக் கடற்கரைப் பகுதியில் ஒரு கப்பல் கட்டும் தளத்தை நிறுவ டில்லி சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்களாம்!

ஏற்கனவே கிழக்குக் கடற்கரையில் — விசாகப்பட்டினத்தில் ஒரு கப்பல்கட்டும் தொழிற்சாலை நிறுவப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் துறைமுக நிபுணர்கள் சிலர் சீக்கிரமே வருவார்கள் என்றும், அவர்கள் மேற்குக் கடற்கரையில் ஒரு கப்பல் தொழிற்சாலை நிறுவுவதற்குரிய சாத்தியக் கூறுகளைக் கணக்கிட்டு திட்டங்களை வகுப்பர் என்றும் தெரியவருகிறது.

கொச்சி

கொச்சித்துறைமுகம்தான் இந்தத் தொழிற்சாலை அமைவதற்கு ஏற்ற இடம் என்றும், இது உலகத்தில் உள்ள பெரிய துறைமுகங்களுள் ஒன்று என்றும், இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்பு உலகம் முழுவதிலும் உள்ள கடற்படைகளை நிறுத்திவைக்கக் கூடிய அளவுக்கு பெரியது என்று கருதப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கழகச் செய்திகள்

சென்னை-38வது வட்டம்

6—4—57 இரவு 9 மணிக்கு மேற்படி கிளையின் பொது உறுப்பினர் கூட்டம் கழகப் பணிமனையில் தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் க. வீரபாண்டியன் செயலாளராகவும், இமயவரம்பன் துணைச்செயலாளராகவும், தமிழ்மணி பொருளாளராகவும், சே. மு. காதர், க. வீரபாண்டியன் ஆகியோர் மாவட்டப் பிரதிநிதிகளாகவும், மற்றும் 11 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை 50-வதுவட்டம்

27—3—57 இரவு நடைபெற்ற மேற்படி வட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டத்தில், வெற்றி பெற்ற அண்ணா அவர்களையும் மற்றும் கழகத் தோழர்களையும் பாராட்டியும், கழகச் செயலாளர் விலகலை ஏற்று, இதுவரையில் அவர் கழகத்துக்காற்றிய பணிக்கு நன்றி தெரிவித்தும், கழகப் பணி மனையை சென்னை - 28, பிராடீஸ் ரோடு, எண். 36 இல்லத்திற்கு மாற்றுவதென்றும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

வாணியம்பாடி:

29—3—57 வாணியம்பாடி நகர தி. மு. க. செயற்குழு, திருவள்ளுவர் கழக மனையில் தோழர் சாமிநாதம் தலைமையில் நடைபெற்றபோது, வெற்றி பெற்ற கழகத் தோழர்களைப் பாராட்டியும், வாணியம்பாடித் தொகுதியில் தி. மு. க. கிளைகள், தொழிற் சங்கங்கள் துவக்குவது பற்றியும், பாராட்டு விழா நடத்துவது பற்றியும் தீர்மானிக்கப்பட்டது.

திருப்பூர்:

30—3—57 இரவு 9 மணிக்கு, கிளையின் பொது உறுப்பினர் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெற்றபோது வெற்றி பெற்ற கழகத் தோழர்களைப் பாராட்டியும், தேர்ந்தெடுத்த மக்களுக்கு நன்றி தெரிவித்தும், பாராட்டு விழா நடத்துவதோடு-கழக கட்டிடம் திறப்பு விழா நடத்துவது பற்றியும், உதயசூரியன் படிப்பக அலுவலகத்தை மாற்றுவது பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இராசிபுரம்—சிங்காளந்தபுரம்:

30—7—57-ல் சிங்காளந்தபுரம் தி. மு. கழகச் செயலாளராக தோழர் ஜி. பி. நாராயணனையும், துணைச்செயலாளராக தோழர் என். குமாரசாமியையும், பொருளாளராக தோழர் டி. கே. எஸ். தீர்த்தமலையையும் தேர்ந்தெடுக்கப்பட்டது. கழகத் திறப்பு விழா தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களால் நடைபெற்றது.

பாராட்டு விழா

மேற்கண்ட கிளையின் சார்பில் ஈ. வெ. கி. சம்பத் அவர்களைப் பாராட்டி சிறப்பான ஓர் ஊர்வலம் நடைபெற்றது. பின், சந்தைப்பேட்டை மைதானம் கே. வி. கே. சாமி பந்தலில் தோழர் ஏ. பி. சுப்ராயக் கவுண்டர் தலைமையில், பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. ஏராளமான பொதுமக்கள் சம்பத் அவர்களுக்கு மலர்மாலை அணிவித்துப் பாராட்டினார்கள். அனைவருக்கும் நன்றி தெரிவித்து சம்பத் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

நெல்லை—ஏறல்:

31—3—57 காலை 10-30 மணியளவில், மேற்கண்ட கிளையின் உறுப்பினர் கூட்டம், கழக மாடியில் தோழர் எஸ். பி. முத்து தலைமையில் நடைபெற்றபோது, வரவு-செலவு கணக்கு சரிபார்க்கப்பட்டு, ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

மதுரை:

31—3—57 காலை 11 மணியளவில், நகர செயற்குழு, தோழர் என். எஸ். இராசா தலைமையில் நடைபெற்றபோது, மதுரை மத்தியத் தொகுதியில் போட்டியிட்ட தோழர் எஸ். முத்து அவர்களுக்கு வாக்களித்த வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தும், நகரச் செயலாளர் திங்கள் ஒருமுறை உட்கிளைகளுக்குச் சென்று, கழக நடவடிக்கைகளைக் கவனிப்பது பற்றியும் தீர்மானிக்கப்பட்டது.

கோபி—புதுப்பாளையம்:

31—3—57 காலை நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தோழர்கள் ஜி. கே. சிகாமணி செயலாளராகவும், ஜி. என். நடராசன் பொருளாளராகவும், பி. யூ. கண்ணன் மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இரவு 7 மணிக்கு, காமாட்சி அம்மன் கோவில் திடலில் தோழர் ஜி. கே. சிகாமணி தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் க. அன்பரசு, ஜி. என். இராசு, பி. ஆர். கே. சாமி, பி. கே. பழனியப்பன் மற்றும் பலர் பேசியபின், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

ஆமதாபாத்:

31—3—57-ல், ஆமதாபாத் வட்டார தி. மு. கழகக் கிளையின் உறுப்பினர் — ஆதரவாளர்கள் கூட்டம், ஆமதாபாத்—மணிநகர் தோழர் ச. சந்திரன் இல்லத்தில் தோழர் வி. நாகராசன் தலைமையில் நடைபெற்றது. தேர்தலில் வெற்றிபெற்ற கழகத் தோழர்களைப் பாராட்டி தோழர் ச. சந்திரன் பேசியபின், மாவட்டப் பிரதிநிதியாக தோழர்கள் ச. கணேசன், ச. சந்திரன், இ. அப்பாவு, வி. கே. வேலன், மு. சாமிதுரை ஆகியோரைத் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, மணிநகர் வட்டத்தில் வட்டத்தில் மே தின விழாவை நடத்தக் கேட்டுக்கொள்வதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனைவருக்கும் தோழர் வி. நாகராசன் இனிப்புகள் வழங்கினார்.

வயிரிசெட்டிப்பாளையம்

3—4—57 மாலை 6 மணிக்கு மேற்படி கழகத்தின் சார்பில், வயிரிசெட்டிப்பாளையம் தெருக்கள் வழியாக அண்ணா—நெடுஞ்செழியன் ஆகியோர்களின் உருவப்படங்களைக்கொண்டு ஊர்வலம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சிலம்ப விளையாட்டு—குத்துச் சண்டை முதலிய நிகழ்ச்சிகளை இடையிடையே நடத்திச் சென்று சிறப்பித்தார்கள்.

இரவு 8 மணிக்கு, மாரியம்மன் கோவில் முன்பு, தோழர் ஏ. துரைராஜ் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் சி. மாணிக்கம், என். அரங்கசாமி, கை. ஆறுமுகம், டி. கே. பி. சாமி, வெ. செகநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றியபின் தோழர் துரைசாமி நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

கோவை—காட்டூர்: (10-வது வட்டம்)

1—4—57-ல், மேற்படி வட்டத் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் காட்டூர் சீனிவாசன் இல்லத்தில் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் க. கோபால் செயலாளராகவும், சி. தேவராசு துணைச்செயலாளராகவும், செ. தேவசகாயம் பொருளாளராகவும், பாண்டி, அ. இராமசாமி, ஜி. கண்ணன், நா. கணபதி, ஆர். எஸ். சவுரி நாயகம், ப. பழனிசாமி, கா. பழனியப்பன், பி. சுந்தரசாமி, என். எஸ். அமீத், பி. ஆரோக்கியசாமி ஆகியோர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இராசிபுரம்—வேலம்பாளையம்:

30—3—57ல், இராசிபுரம்—வேலம்பாளமம் தி. மு. கழகத் திறப்பு விழா தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களால் நடைபெற்றது. அதுபோது சிறப்பான ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. தோழாகள் சம்பத், ஜி. பி. சோமசுந்தரம், சே. வி. கே. இராமசாமி ஆகியோர் கலந்துகொண்டனர். அனைவருக்கும் மலர்மாலைகள் அணிவித்து சிறப்பளிக்கப்பட்டது. மக்களுக்கு நன்றி தெரிவித்து சம்பத் அவர்கள் சொற்பொழிவாற்றினர்.

தஞ்சை—கட்டிமேடு:

31—3—57 மாலை 6½ மணிக்கு மேற்படி கிளையின் உறுப்பினர்கள் கூட்டம் அ. செகபர் தேசர் நிலையத்தில் கூடி, உறுப்பினர்களிடம் சந்தா வசூலிப்பது பற்றியும், வசூலிக்க இருவர் நியமித்தும், செயற்குழு அமைத்து கட்டிடம் நிறுவுவது பற்றியும் தீர்மானிக்கப்பட்டது.

கருமலை வட்டக் கிளை அமைப்பு

27—3—57 இரவு 7 மணிக்கு, கருமலை வட்ட தி.மு.க. அமைப்பு தோழர் இ. இராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இரா. பிச்சமுத்து செயலாளராகவும், எம். பி. தங்கமுத்து துணைச் செயலாளராகவும், இ. இராமசாமி பொருளாளராகவும், பி. கே. இராமசாமி, எம். கே. வீரப்பன், ஏ. டேவிட், வி. ஏ. முருகையா, இ. ஐயாப் பிள்ளை, சே. பி. அழகையா, இராமலிங்கம் ஆகியோர் நிர்வாக உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இரண்டு முக்கியத் தீர்மானங்களும் நிறைவேறின.

சேலம்-நீர்முள்ளிக்குட்டை

4—4—57ல் மேற்படி கிளையின் அவசரக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் பி. எம். இராமநாதன் செயலாளராகவும், என். பி. சின்னு துணைச் செயலாளராகவும், சே. ஏ. சின்னப்பன் துணைச் செயலாளராகவும், என். கே. கூத்தப்பன் மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, தேர்தலில் வெற்றி பெற்ற கழகத் தோழர்களைப் பாராட்டியும், பொதுக்கூட்டம் நடத்துவது பற்றியும் தீர்மானிக்கப்பட்டது.

சின்னுளப்பட்டி

1—4—57 இரவு 10 மணிக்கு கழகப் பணிமனையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

'கழகத்தின் உட்பொருளை உலகம் உணர்ந்துவிட்டது'

'தொண்டர்களின் லட்சிய உழைப்பு உலகறிந்தது'

எதிர்க்கட்சியாக தி.மு.கழகம் பணி ஆற்றுவது குறித்து நெல்லை இதழ்

கா. சீ. க.-வும், தி. மு. கழகமும் சட்டசபையில் எதிர்க் கட்சியாக இணைந்து செயல்பட வேண்டும் என்பதை வற்புறுத்தி திருநெல்வேலி நகரிலிருந்து, எஸ். என். சோமயாசுலு அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் தினத்தாளான 'விஜயா' வில் 'அண்ணாதுரைக்கு பகிரங்கக் கடிதம்' என்ற தலைப்பில் ஒரு முடங்கல் வெளியிடப்பட்டுள்ளது. அம்முடங்கலில், நமது கழகத்தின் தூய பணி, தேர்தலில் கிடைத்துள்ள வெற்றி, தாங்கிக் கோண்ட பெருந்தாக்குதல் ஆகியவை குறித்து விளக்கம் தந்துள்ளது.

"சட்டசபையில் தங்களைக் கட்சித் தலைவராகக்கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம், எதிர்க் கட்சியாகச் செயலாற்றப்போவது தெரிந்து மகிழ்கின்றோம்.

"சனநாயக அரசியல் அமைப்பில் திறமையான எதிர்க் கட்சி நிலவ வேண்டுமென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடியதேயாகும். ஆளும் கட்சியின் 'குட்டு'க்களை அஞ்சாமல் அம்பலப்படுத்துவதிலேயே எதிர்க் கட்சியின் பலம் குடிகொண்டிருக்கிறது.

"தங்கள் தலைமையில் இயங்கவிருக்கும் எதிர்க்கட்சி இந்த உண்மையை அறிந்தோடும் ஆணித்தரமாக நடைமுறையில் கடைப்பிடிக்கும் என்று நம்புகிறோம்.

"மொத்தம் 15 இடங்களின் பலன் கொண்டதே தங்களுடைய எதிர்க் கட்சியாயினும் 110 இடங்களின் போட்டியில் இந்த 15 இடங்களின் வெற்றியை சுமாராக எண்ணிவிடுவதற்கில்லை. அரசியலில் குதித்த முதல் கட்டத்திலேயே தனிக் கட்சி என்ற முறையில் தங்களுக்குக் கிடைத்துள்ள வெற்றி போற்றற்குரியதே.

"கழகத் தொண்டர்கள், தேர்தலின் போது சற்றேனும் தளராமல், அணுவும் உறுதி குலையாமல் கட்டுப்பாட்டுடன் இலட்சியத்திற்காக அரும்பாடுபட்டு உழைத்த உண்மை உலகறிந்தது. ஆளும் கட்சியின் ஆணவமோ அல்லது, ஆஸ்திகம் எங்களுக்கே என்று தம்பட்டமடிப்போரின் வசைமாரியோ, அல்லது, ஈரோடு பெரியார் வாய் வழிப்பிறந்த 'கண்ணீர்த்துளி'களோ தங்கள் இலட்சியப் பாதையைச் சேதுக்கவில்லை.

"நாங்கள் நாஸ்திகர்கள் அல்ல வென்று தி. மு. கழகம் தெளிவாக்கியிருப்பது வரவேற்கத் தக்கது. சமூக ஊழல்களை அம்பலப்படுத்துவதை கருப்பொருளாகக் கொண்டிருக்கும் தங்கள் கழகத்தின் உட்பொருளை உலகம் உணர்ந்துவிட்டது; கழகம் வெளியிட்டுள்ள தேர்வுரையும் அதை ஒளிபெறச் செய்துவிட்டது.

"காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சியும் எதிர்க்கட்சி என்ற முறைக்குட்பட்டதேயாகும். நாஸ்திகப் பழி நீக்கப்பட்டதுடன் கழகத்திற்கும், காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சிக்குமிடையே தானாகவே அண்மை பிறக்கிறது. நிர்வாக ஒழுங்கின் ஊழல்களை சுட்டிக்காட்டுவதே சீர்திருத்தக் கட்சியின் இலட்சியமுமாகும். எதிர்க்கட்சி அமைப்புக் காரத்தால் இக்கட்சியையும் அரவணைத்துக்கொள்வது எதிர்காப்பின் அடித்தளத்திற்கு உரமூட்டுவதாகவே அமையும்.

"மத்திய சர்க்காரிடம் எல்லா அதிகாரங்களும் குவிந்துகிடப்பதை எவருமே விரும்பமாட்டார்கள்; எதற்கெடுத்தாலும் ஆயிரம் மைல்களுக்கப்பால் நிலவும் மத்திய ஆட்சியின் தயவை நாடுவது தகாது என்பது அனைவருக்கும் பொதுவான கோட்பாடேயாகும்."

செஞ்சிலந்தியைக் கொல்ல மருந்து

இந்திய விஞ்ஞானியின் சாதனை

பருத்திச் செடிகளையும், பழமரங்களையும் தாக்கிச் சேதம் விளைவிக்கும் செஞ்சிலந்தியைக் கொல்லும் மருந்தை டாக்டர் ஆர். கோஷ் என்ற இந்திய விஞ்ஞானி கண்டுபிடித்திருக்கிறார். 'டெட்ராம்' என்ற பெயரில் இந்த மருந்து விற்பனைக்கு வந்திருக்கிறது.

பழச்செடிகளைத் தாக்கும் செஞ்சிலந்தியையும் வேறு சில பூச்சிகளையும் கொல்ல புதியதோர் மருந்து, தேவை என்ற நிலை 1947-ம் ஆண்டிலேயே ஏற்பட்டது. 'டிடிட்' 'பாராதியான்,' போன்ற பூச்சிக் கொல்லிகளுக்குத் தப்பி வாழ்ந்தது இந்தச் செஞ்சிலந்தி!

செஞ்சிலந்தியை ஒழிக்க இந்த மருந்துகளை வீசப்பட்ட இடங்களில் செஞ்சிலந்தி சாகவில்லை; அவற்றைத் தின்று வாழும் வேறு பூச்சிகள்தான் இறந்தன. ஆகவே இந்திய விஞ்ஞானி 1949-ல் இது பற்றி ஆராய்ச்சித் தொடங்கினர்.

சில மருந்துகள் செடிகளில் தங்குவதில்லை; ஆனால் கொல்லும் ஆற்றல் மிக்கவை. சில கொல்லும் ஆற்றல் குறைந்தவை. செடியிலுமேறி, குரையிடும் பூச்சியைக் கொல்லுமாற்றலுமுள்ள ஓர் மருந்தைத் தயாரிப்பதில் அவர் ஈடுபட்டார்.

'டெட்ராம்' தொடு நஞ்சு பூச்சியின் உடலில் பட்டதும், தோலைத் துளைத்துச்சென்று, உயிரை மாய்க்கும் ஹாலந்து, ஆஸ்டிரேலியா, ஜப்பான் முதலிய பல நாடுகளில் இதை உபயோகித்து வெற்றி கண்டபிறகே பொதுவிற்பனைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

சிங்கப்பூருக்கு சுய ஆட்சி உரிமை

பாதுகாப்பு, அரசியல் உறவுகள் பிரிட்டனிடமே இருக்குமாம்

லண்டன், ஏப். 9—

சிங்கப்பூர் புதிய அரசியலுக்கான அடிப்படைத் திட்டத்தை பற்றி சிங்கப்பூருக்கும்—பிரிட்டனுக்கும் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தத் திட்டப்படி சிங்கப்பூருக்கு உள்நாட்டு சுய ஆட்சி உரிமை தரப்பட்டிருக்கிறது.

வெளிப் பாதுகாப்பு, அரசியல் உறவுகள் மட்டும் பிரிட்டனிடம் இருக்கும்.

மீண்டும் அவரே!

பீகாரில் பதிவாயிற்று — டில்லியில் எண்ணப்பட்டது

புதுடில்லி, ஏப். 9—

பீகார் முதலமைச்சர் டாக்டர் கிருஷ்ண சின்ஹ பீகார் சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவருக்கு 145 வாக்குகளும் டாக்டர் அனுக்கிரக நாராயண சின்ஹவுக்கு 109 வாக்குகளும் கிடைத்துள்ளன. 3 வாக்குகள் செல்லுபடியாகாதவை.

வாக்குகள் பீகாரில் பதிவு செய்யப்பட்டு, டில்லியில் எண்ணப்பட்டது.

அண்ணாவின் ஆய்வுரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வளர்ந்திருக்கிறதென்றால், அது தி. மு. கழகமாகும்.

உழைத்த உழைப்புக்கு உருவான பலனா?

"அப்படிப்பட்ட தி. மு. கழகத்திற்கு இந்தத் தேர்தலில் 15 இடங்கள்தான் கிடைத்தன என்றால், அது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரியதாக உங்களுக்குத் தோன்றுகிறதே தவிர—நம் அளவுக்கு இது பெருமைக்குரியதாகத் தோன்றுகிறதே தவிர, நாம் உண்மையிலேயே பட்டபாட்டுக்கு இவ்வெற்றி ஈடானதென்று என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

வேதனை நீங்கிவிட்டதாக ஏமாற்றமாட்டேன்

"அதிலும் நான், பல இடங்களில் ஏற்பட்டுள்ள வேதனை தரும் தோல்விகள் என் உள்ளத்திலிருந்து நீங்கிவிட்டதாக—இவ் வரவேற்புக் கூட்டங்களில் நீங்கள் காட்டும் உற்சாகத்தினால் நான் துடைத்துக்கொண்டேன் என்பதாகக் கூறி உங்களை ஏமாற்றிவிட விரும்பவில்லை.

"வேதனை தரும் தோல்விகளை நாம் பார்த்திருக்கிறோம். பெரிய பெரிய ஏமாற்றங்கள் நமக்கு ஏற்பட்டிருக்கின்றன. பல இடங்களில் நம் தோழர்கள் பரிதாபகரமான முறையில் தோற்கடிக்கப் பட்டிருக்கிறார்கள். சில இடங்களில் நம் தோழர்கள், பதறப் பதற வெட்டுவது என்பார்களே அதுபோல், ஆயிரம் வாக்குகளுக்கும் குறைவான வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். குறைந்தது ஐம்பது பேர் வருவர் என்று சில ஆருடக்காரர்கள் கணித்தார்கள். 30 பேராவது வருவர் என்று நான் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் 15 இடங்களிலேதான் வெற்றி பெற்றிருக்கிறோம்.

எண்ணிப் பார்க்கையில் நாம்என்ன நினைப்போம்?

"ஆகையால், பெற்ற வெற்றி, பெற்றிருக்க வேண்டிய வெற்றியில் பகுதி அளவுதான் என்பதை நாம், இந்த வெற்றி விழாவின் போது மறந்துவிடக்கூடாது. அதனாலே—15 என்ற காரணத்தாலே, 'அல்பம்' என்று இதைத் தள்ளிவிடுகிறோம் என்று அர்த்தமல்ல; '15-தானே பெற்றோம்?' என்பதாலே, இதனை அனுபவிக்காமலிருக்கிறோம் என்றும் கருத வேண்டாம். இதற்குரிய மகிழ்ச்சியைப் பெறுகின்றோம். ஆனால், பெருமூச்சோடு நினைக்கும்போது, நாம் எண்ணிய வெற்றிகளைப் பெற்றிருந்தால் — நம் தகுதிக்கேற்ற அளவு வெற்றி கிடைத்திருந்தால்—நாட்டு மக்களை அணுகும் முறையில் நமக்கு எல்லா வழிமுறைகளெல்லாம் தெரிந்து நமக்கு நல்ல வசதிகளும் வாய்ப்புகளும் கிடைத்து, 50 பேரோ 30 பேரோ — கணக்குக் கேற்றபடி நாம் வெற்றி பெற்றிருந்தால் இந்த ஆனந்தம் — பெருமை - பூரிப்பு - மகிழ்ச்சி — வரவேற்பு - பாராட்டு இன்னும் பன்மடங்கு அதிகமாக இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

காலம் கற்பிக்கும் பாடம்

"பெருமைப் படத்தக்க வெற்றியும் பெற்றிருக்கிறோம்; அதைப் போல, வேதனை தரும் தோல்வியையும் அடைந்திருக்கிறோம். வெற்றியினாலே தோல்விகளை எல்லாம் மறந்துவிடமாட்டோம்; தோல்விகளினால் வெற்றியையும் அனுபவிக்காமல் இருந்துவிட மாட்டோம். இது உண்மையிலேயே நமக்கு—ந் அதிகமான அளவுக்கு ஆணவப்பட்டு விடாதே; என்றும் உனக்கு ஆனந்தத்தையும் தருவேன் அதே நேரத்தில் ஆயாசத்தையும் தருவேன்' என்று நமக்குக் காலம் கற்பிக்கும் பாடம் என்ற முறையில்தான், நாம் இந்தத் தேர்தல் முடிவுகளை அணுகவேண்டும்.

மக்கள் நம்மைக் கைவிட்டுவிட்டனரா?

"15 இடங்களில்தான் நம்மால் வெற்றிபெற முடிந்தது என்றால் அதற்குக் காரணம், நாட்டு மக்கள் நம்மிடம் அக்கறை காட்டாமல் இருந்தார்கள் என்று மக்களை குறை சொல்ல முற்படவில்லை. மக்கள் போதுமான அளவுக்கு விழிப்புணர்ச்சியுடன் நம்மிடத்தில்நல்ல ஆர்வத்தைக் காட்டினார்கள்; நம்மிடத்தில் நல்ல நம்பிக்கை வைத்தார்கள்; எத்தனையோ பலமான எதிர்ப்புகளுக்குப் பிறகு—எவ்வளவோ ஈனத்தனமான எதிர்ப்புகளுக்குப் பிறகு—எத்தனையோ இழிசொற்களும் பழிசொற்களும் நம்மீது வீசப்பட்ட பிறகு—எவ்வளவோ பணபலத்தை நமக்கெதிரிடையாகப் பயன்படுத்திய பிறகு—நமக்கு 15 இடங்கள் கிடைக்கத்தக்க அளவுக்கு நாட்டு மக்கள் துணை நின்றார்கள் என்றால்—ஏறக்குறைய 17 இலட்சம் வாக்குகளை நாட்டு மக்கள் நமக்கு அளித்திருக்கிறார்கள் என்றால் மக்கள் நம்மைக் கைவிட்டுவிட்டார்கள் என்று பொருள்? மற்றவர்களுடைய வாக்குகளை வாங்குவதற்கு நமக்குத் திறமை இல்லாமல் போய்விட்டது என்று பொருள்.

அனுபவக் குறைவும் தோல்விக்குக் காரணம்

"நான் வெளிப்படையாகக் கழகச் சார்பில் உங்களிடத்தில் ஒளிவு மறைவில்லாமல் ஒப்புக்கொள்வேன்—அனுபவக் குறைவு நம் தோல்விக்கு ஒரு முக்கியமான காரணமாகும். தேர்தலில் நமக்கு அனுபவமில்லை; தேர்தலில் அனுபவமில்லாதது மாத்திரமல்ல—கடந்த 10, 15 ஆண்டுக்காலமாகவே, தேர்தல் என்றாலே நமக்குக் கசப்பாக இருந்துவந்தது. தேர்தலில் கசப்பு என்பது மாத்திரமல்ல—நமது தலைவர் பெரியார் அவர்கள், 'தேர்தல் என்றாலே கேவலம்' என்று சொல்லி வைத்தார்.

15 ஆண்டுகளாக!

"இந்த நாட்டு மக்களைப் பார்த்து, 'ஐயா—அப்பா' என்று கெஞ்சி ஓட்டு கேட்டால், இவர்களுக்கு என்ன தெரியும்? இவர்கள்தான் 100-க்கு 8 பேர் 10 பேர் தானே படித்தவர்கள்? இவர்கள் எங்கே அரசியல் தெளிவு பெறப் போகின்றார்கள்? இவர்களிடத்தில் ஓட்டு கேட்டால் கிடைக்காது' என்று பெரியார் சொல்லிச் சொல்லி, 'மக்களிடம் ஓட்டுக் கேட்பது என்பது கேவலம்' என்று நாம் கருதியும், மக்களை நாம் அணுகவே முடியாது என்று கருதியும், 15 வருடங்களாக அஞ்ஞாத வாசம் செய்துவிட்டோம்.

"தேர்தல் என்றாலே கசப்பாக இருந்தது; திடீரென்று தி. மு. க. திருச்சி மாநில மாநாட்டில் 'தேர்தலில் ஈடுபட வேண்டும்' என்று தீர்மானித்தது. கட்சியின் உள் அமைப்புகளை நன்றாகத் தெரிந்து கொண்டிருப்பவர்கள் அறிவார்கள்—அந்த முடிவு வர வேண்டுமென்று நான் விரும்பியவனல்ல; தேர்தலில் ஈடுபட வேண்டுமென்ற எண்ணம் எனக்கு அதிகமாக இருந்ததில்லை; ஆனாலும், திருச்சி மாநாட்டுத் தீர்மானத்திற்கேற்பவே நானும் அந்த முடிவுக்குக் கட்டுப்படவேண்டியவனானேன்'—என்பது.

தொகுதிகள் நிலைமை 'தொழில் பழக்க'மல்ல!

"நமக்கு, தொகுதிகள் எப்படி எப்படி இருக்கின்றன என்பது தெரியாது. ஆனால் மாநாட்டுக்கு எந்தெந்த இடங்களில் இடம் கிடைக்கும்—அதைக் கேட்டால் நமக்குத் தெரியும்; எந்த நாடகம் நாட்டு மக்களால் அதிகம் விரும்பப்படுகிறது—அதைக் கேட்டால் நமக்குத் தெரியும்; ஏனென்றால், அது நமது 'தொழில் பழக்கம்'; ஆனால், தேர்தல் நமக்கு அப்படிப் பட்ட 'தொழில் பழக்க'மல்ல! ஆகவே, தொகுதி எப்படி இருந்தது என்பது நெடுங்காலம்வரையில் நமக்குத் தெரியவில்லை.

வட நாட்டு...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நாணயமான சர்க்காரா? 2 அணாவுக்கு 12 காசு என்று சொன்னது இந்த சர்க்கார்தான்; ஆனால் கவரை 13 காசாக மதி என்றுகூறி, அந்த அணாவுக்கு 12 காசு என்ற சட்டத்தை மீறியது சர்க்காரா, மக்களா என்று கேட்கிறேன்.

"பாதுகாப்பிற்காக வைக்கப் பட்ட வேலியே நகர்ந்து பயிரை மேய்ந்து கொண்டு போகிறது என்றால், ஆடு மாடுகள் மேய்வதை யார் கேட்க வேண்டும்?

"சட்ட வரம்புக்கு உட்பட்ட அட்டவணை போட்டுக் கொடுத்து விட்ட இந்த சர்க்கார், இரண்டு அணா கவரை கேட்டால் அதற்கு அதிகமாக வேறொரு நயா பைசா தலையும் ஒட்ட வேண்டுமென்கிறது; இதுதான் சர்க்காரா? சட்டமே இல்லாமல் வரி விதிக்கப்படுகிறதே! இதை, எந்தச் சட்டத்தைக்கொண்டு இந்திய சர்க்கார் செய்தது என்பதை மக்கள் உணர்ந்து பார்க்க வேண்டும்.

"இன்றைக்கு சர்க்கார் ஒழுங்காக நடைபெறுகிறதா? அல்லது வாண வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறார்களா? இதனால் யாருக்கும் நஷ்டமில்லை என்றல்லவா நேரு பண்டிதர் கூறுகிறார்; வேடிக்கையே வேடிக்கை!

"இப்படி நமது நாகரிகத்தையும் பண்பாட்டையும் அழிக்க வல்ல முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. நாம் செயலற்று இருந்துவிடுவோமானால் எதிர்காலம் நல்லதொரு நிலைமையில் இருக்காது.

"இவற்றை நீங்கள் உணர வேண்டும். வடநாட்டு ஆதிக்கம் அரசியல்துறையில் மட்டுமல்லாமல் பொருளாதார—சமுதாயத் துறையிலும், மொழித் துறையிலும், வேறு பல துறைகளிலும் இங்கு வந்து தாக்குகின்றன.

"இவற்றையெல்லாம் எதிர்த்துப் போரிட கழகத் தோழர்களும் பொதுமக்களும் முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன்."

வெற்றி ஊர்வலம்

12—4—57 மாலை 4 மணிக்கு சென்னை — சூளை 17-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களைப் பாராட்டி, கழக மனையிலிருந்து ஓர் ஊர்வலம் புறப்பட்டு வட்டத்திலுள்ள முக்கிய தெருக்கள் வழியாக வரும்.

துணியமுத்தூர் மகளிர்க்கு மஞ்சள் அன்பளிப்பு

வெற்றி பெற்ற கழகத் தோழர்களைப் பாராட்டி 13—4—57 காலை 10 மணியளவில் குணியமுத்தூர் தோழர் கே. ஆர். சண்முகம் அவர்களின் நிலத்தில் விளைந்த மஞ்சளை, தோழர் தங்கமாணிக்கம் அவர்கள் மகளிர்க்கு வழங்குவார்.

முத்தமிழ் மன்றத் திறப்பு விழா

12—4—57 மாலை 6 மணிக்கு, சென்னை — சைதை மேட்டுப் பாளையம் முத்தமிழ் மன்றத் திறப்பு விழா, தெற்கு கவரைத் தெருவில் தோழர் எஸ். வி. மூர்த்தி தலைமையில் நடைபெறும். தோழர்கள் கா. அப்பாதுரையார், கண்ணதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

'கடவுள், சுவர்க்கம், நரகம் என்ற கூற்றுகள் எல்லாம் வெறும் கட்டுக் கதைகள்—பொய், என்று பீகிங் ரேடியோ கூறியதாக செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

***

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

குளித்தலையில்

வெற்றி விழா--வரவேற்புப் பொதுக்கூட்டம்

★

14—4—57 மாலை 6-மணிக்கு, குளித்தலையில் நடைபெறுகிற தி. மு. க. பொதுக்குழுவை யொட்டி கடம்பர்துறை அழகிரி சதுக்கத்தில் பொதுமக்கள் சார்பில் வெற்றிபெற்ற எம்.எல்.ஏ., எம்.பி.-க்களுக்கு நடைபெறும் வரவேற்பு விழாவில்

மு. கருணாநிதி அவர்கள் தலைமையில்

அண்ணா, இரா. நெடுஞ்செழியன்,

மற்றும் கழக முன்னணி வீரர்கள் பலரும் கலந்து கொள்வார்கள்.

—வெற்றிவிழா வரவேற்புக் குழுவினர், குளித்தலை.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நன்றியறிவிப்புக் கூட்டம்

★

13—4—57 மாலை 6 மணிக்கு, சென்னை—இராயபுரம் சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றச் சார்பில், பனைமரத் தொட்டி—'அம்மன்கோவில் திடலில், தோழர் கே. குப்புராசு தலைமையில் வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி அறிவிப்புக் கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், காஞ்சி கலியாணசுந்தரம், என். சிவரத்தினம், வே. திருநாவுக்கரசு மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

கோவை 23-வது வட்ட தி. மு. க. கிளை திறப்பு விழா

13—4—57 மாலை 6 மணிக்கு மேற்படி கிளைத் திறப்பு விழா ம. ந. க. வீதியில் தோழர் சி. ஜே. கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும். தோழர் வே. கிருஷ்ணமூர்த்தி திறப்பு விழாவாற்றுவார். தோழர் சி. டி. தண்டபாணி கொடியேற்றிவைப்பார்; தோழர்கள் மு. இராமநாதன், காந்தி, சண்முகம், முத்துச் சோழன் பேசுவர்.

நீத்தார் நினைவு நாள்

12—4—57 காலை விருதம்பட்டு தி. மு. க. செயலாளர் தோழர் வி. டி. நேயன் துணைவியார் தோழியர் இராதா அம்மையாரின் மறைவு குறித்து, அம்பேத்கார் வீதியில் நீத்தார் நினைவு நாள் தோழர் மா. பா. சாரதி தலைமையில் நடைபெறும். தோழர்கள் அ. கருத்தோவியன், மு. கோதண்டன் ஆகியோர் இரங்கலுரையாற்றிவர்.

சூரியன் அறிவகம் திறப்பு விழா

13—4—57 மாலை 6 மணிக்கு, குடியேற்றம்—நல்லூர் பேட்டை பாவோடும் தோப்பு நீலிக்கொல்லைத் தெருவில், சூரியன் அறிவகம் திறப்பு விழா, தோழர் கல்லபாடி-முத்துசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் ப. துரையரசு, செ. ம. அரங்கசாமி, இரா. சாரங்கபாணி, க. முனுசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கோவை—மதுக்கரையில் தி. மு. க. கிளைத் துவக்க விழா

13—4—57 மாலை 5 மணிக்கு, மேற்படி கிளைக் கழகத் துவக்க விழா, மதுக்கரை—பாலக்காடு பாதையில், தோழர் தங்கமாணிக்கம் தலைமையில் நடைபெறும்; தோழர் சி. டி. தண்டபாணி கழகத்தைத் திறந்து வைப்பார்; தோழர் வே. கிருஷ்ணமூர்த்தி கொடியேற்றுவார்; தோழர்கள் மு. இராமநாதன், சே. அ. இராசமாணிக்கம், சு. ஆறுமுகம், கோவை-செழியன் ஆகியோர் பேசுவர்.

சிறப்புக் கூட்டம்

★

13—4—57 காலை 9-மணிக்கு **கோகலே மண்டபத்தில்**

★

நடிகர் என். எஸ். நாராயணன் தலைமையில்

புரட்சி நடிகர்

எம். ஜி. ராமச்சந்திரன் —'கலைஞரின் நாட்டுப் பற்று'

கண்ணதாசன் —'கவிஞனும் காதலும்'

என்ற தலைப்புகளில் பேசுவர்.

எஸ். எஸ். தென்னரசு

அலமேலு--அப்பாதுரை

ஆகியவர்களும் பேசுவர்.

★

நன்கொடை: ரூ. 1; அணா 8.

குறிப்பு:—37-வது வட்ட தி. மு. க. பணிமனையில் மாலை 6-மணி முதல் இரவு 9-மணி வரையில் நுழைவுச்சீட்டுகள் கிடைக்கும்.

—பெண்கள் படிப்பகம், இராயப்பேட்டை.

★★★★★★★★★★★★★★★★★★

அண்ணா

சுற்றுப்பயணம்

★

ஏப். 12: வேளியூர்
13: திருவள்ளூர் கலைக் கழகம்
14: குளித்தலை
15: காலை — மாயவரம்;
,, மாலை — பொன்மலை திருச்சி
16: பெரம்பலூர்
17: நெல்லிக்குப்பம்
18: விருத்தாசலம்
19: தம்மம்பட்டி
20: ஆரணி (வ. ஆ.)
21: சென்னை

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

★

ஏப்ரல்
13: சென்னை-இராயபுரம்
14: குளித்தலை
15: காலை—மாயவரம்
மாலை—பொன்மலை
இரவு—திருச்சி
16: லால்குடி வட்டாரம்
17: காலை — நெல்லிக்குப்பம்
மாலை—கடலூர்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.